THE HON. THIRU K. ANBAZHAGAN : It is reported that the average number of out-paients treated in this centre is only 66 per day. In other primary health centres it ranges between 200 to 300 and the number of inpatient per day is not even one. Therefore the suggestion given by the Estimates Committee is to be scrutinised further and if there is absolute necessity, then only we will be able to implement it.

மருத்துவர்கள், செவிலியர்கள் ஹஜ்ஜிப் பயணம்

*67 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) 1973-ல் ஹஜ்ஜிப் பயணம் செய்து பணிபுரிய எத்தனை டாக்டர்கள், நர்சுகள் மனுச் செய்தனர்?

(இ) இவர்களில் எத்தனை பேருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) 1973-ல் ஹஜ்ஜி பயணம் சென்று பணிபுரிய மனு செய்தவர்கள் எண்ணிக்கை:

டாக்டர்கள்	..	32
மருந்தாளுநர்கள்	..	14
நர்சுகள்	..	10

(இ) ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஹஜ் யாத்திரை செல்பவர்களை ஏற்றிக் கொண்டு பம்பாயிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஒரு கப்பல் செல்கிறது. அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த யாத்திரிகர்களுடைய உதவிக்காக டாக்டர்கள், மருந்தாளுநர்கள், நர்சுகள் போன்றவர்களை அனுப்பி வைக்க மாநில அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு அந்தப் பயணிகளுக்கு உதவி செய்வதற்காக டாக்டர்கள், மருந்தாளுநர்கள், நர்சுகள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒரு பட்டியல் கேட்கிறார்கள். அந்தப் பட்டியல் கேட்பதையும் கடைசி நேரத்தில் கேட்கிறார்கள். 20 நாட்கள், 30 நாட்களுக்கு முன்னர் பட்டியல்

1974 சனவரி 22]

தயாரிக்கச் சொல்கிறார்கள். அதற்கு முன்னரே மத்திய அரசு அவர்களுக்குக் கிடைத்திருக்கும் பட்டியல் அடிப்படையில், பக்கத்து மாநிலங்களிலிருந்து வந்துள்ள பட்டியலின் அடிப்படையில், தேர்ந்தெடுத்துச் சிலரை அனுப்புகிறார்கள். அதன் காரணமாக, இனி பட்டியலை நாம் முன்கூட்டியே தயாரித்து அனுப்பிவிட்டு, அவர்கள் அப் பட்டியலிலிருந்து விரும்புகிறவர்களை எடுத்துக் கொள்ளட்டும் என்ற முறையைக் கடைப் பிடிக்கலாமா என்ற எண்ணம் இப்பொழுது அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : என்ன காரணத்தினால் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது ஹாஜ் யாத்திரை போவதற்கு கேட்கிற விண்ணப்பம் அல்ல. அப்படிப் போகிறவர்களுக்குத் துணை செய்வதற்கு, தேவையானால் அரசு பயன்படுத்திக் கொள்ளட்டும் என்று கேட்டுக்கொள்வது. அந்தப் பட்டியலை நாம் தயாரித்து அனுப்பும்போது அவர்களுடைய இசைவு தெரிந்து அனுப்ப வேண்டியிருக்கிறது. அதனால், ஆறு மாதங்களுக்கு முன்னரே கேட்டுக்கொள்கின்ற முறையைக் கடைப்பிடித்தால் நாம் பட்டியல் அனுப்பி, மத்திய அரசு அதைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். அப்படியில்லாமல், முப்பது நாட்களுக்கு முன் பட்டியல் கேட்டு, நாம் அனுப்பும் போது, கடந்த ஆண்டு தாமதம் ஏற்பட்டது. இனி வருகிற ஆண்டில் முன்கூட்டியே அனுப்பலாம் என்று நாமாக ஆலோசித்திருக்கிறோம்.

திரு. வை. பாலசுந்தரம் : ஹாஜ் யாத்திரைக்குத் தமிழ் நாட்டிலிருந்து ஆண்டுதோறும் எத்தனை பேர் போகிறார்கள் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் நான் தெரிவிப்பதற்கில்லை.